**செய்தி வெளியீடு எண்: 694** **நாள்:22.11.2012**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (22.11.2012) சென்னை மாநகர் போக்குவரத்துக் கழக மத்திய பணிமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு 675 புதிய பேருந்துகள் மற்றும் 286 புதிய வழித்தடங்களைத் துவக்கி வைத்தார்கள்.

ஒரு மாநிலத்தின் முன்னேற்றத்தில் போக்குவரத்து சேவை முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டில் போக்குவரத்துச் சேவையை பொதுமக்களுக்கு அளிப்பதில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. மாநிலத்தில் பெருகி வரும் மக்கள்தொகைக் கேற்ப, கிராமங்கள் மற்றும் நகர்ப்புறங்கள் விரிவடைந்து வருகின்றன. போக்குவரத்து ஒன்றே விரிவடையும் பகுதிகளை ஏனைய பகுதிகளுடன் இணைக்கும் பாலமாக விளங்குகிறது. பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு புதிய பேருந்துகள் மற்றும் புதிய வழித்தடங்களை அறிமுகம் செய்து வருகிறது.

அந்த வகையில், மாநகர் போக்குவரத்துக் கழகத்துக்கு 28 புதிய பேருந்துகள் மற்றும் 28 புதிய வழித்தடங்கள்; அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்துக்கு 3 புதிய பேருந்துகள் மற்றும் 2 புதிய வழித்தடங்கள்; விழுப்புரம் அரசு போக்குவரத்துக் கழகத்துக்கு 169 புதிய பேருந்துகள் மற்றும் 70 புதிய வழித்தடங்கள்; சேலம் அரசு போக்குவரத்துக் கழகத்துக்கு 137 புதிய பேருந்துகள் மற்றும் 45 புதிய வழித்தடங்கள்; கோவை அரசு போக்குவரத்துக் கழகத்துக்கு 174 புதிய பேருந்துகள் மற்றும் 55 புதிய வழித்தடங்கள்; கும்பகோணம் அரசு போக்குவரத்துக் கழகத்துக்கு 69 புதிய பேருந்துகள் மற்றும் 69 புதிய வழித்தடங்கள்; மதுரை அரசு போக்குவரத்துக் கழகத்துக்கு 10 புதிய பேருந்துகள் மற்றும் 10 புதிய வழித்தடங்கள்; திருநெல்வேலி அரசு போக்குவரத்துக் கழகத்துக்கு 85 புதிய பேருந்துகள் மற்றும் 7 புதிய வழித்தடங்கள், என மொத்தம் 675 புதிய பேருந்துகள் மற்றும் 286 புதிய வழித்தடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று சென்னை மாநகர் போக்குவரத்துக் கழக மத்திய பணிமனையில் நடைபெற்ற விழாவில் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

2012–2013ஆம் ஆண்டு போக்குவரத்துத்துறை மானிய கோரிக்கையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் இயக்கப் பேருந்துகளின் எண்ணிக்கை 20,000 ஆக உயர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அறிவிக்கப்பட்ட இலக்கைவிட, இன்று துவக்கப்பட்ட 675 புதிய பேருந்துகளையும் 286 புதிய வழித்தடங்களையும் சேர்த்து, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் இயக்கப் பேருந்துகளின் எண்ணிக்கை 20,500 ஆக உயர்ந்துள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு மூன்றாவது முறையாக பொறுப்பேற்ற பிறகு இன்று வரை பல்வேறு நிகழ்ச்சிகளின் மூலம் **1353** புதிய வழித்தடங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், போக்குவரத்துத் துறை முதன்மைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 22.11.2012